DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| | | |
|---|---|---|
| STC.NO. 5313/2014 | Crime No.: | Station : |
| DW : 2(எதிரி) | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | ரேணுகா | Caste | |
| Spouse Name | ரமேஷ் | Calling | ப்யூட்டிசியன் |
| Village | சத்தியமங்கலம் | Religion | |
| Taluk | | Age | 42 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 31.01.2025 |

முதல் விசாரணை தொடர்ச்சி:

சத்தியமாக சொல்கிறேன். நான் இந்த வழக்கில் எதிரி. எதிரி தரப்பு சாட்சி 2 ஆக இருந்து எனது முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். ஆவணங்களை குறியீடு செய்வதற்காக இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன்.

1. புகார்தாரர் சதீஷ்குமார், ரவிக்குமார், கோடீஸ்வரன் ஆகியோர்கள் மீது 27.11.2013 தேதியில் நான் சத்தியமங்கலம் காவல் நிலையத்திற்கு புகாரை நேரில் கொடுத்துள்ளேன். அதன் நகலை ஈரோடு காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கும் ஒன்றை தபால் மூலமாக அனுப்பியிருந்தேன். என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகாரின் கை நகல் மற்றும் மேற்படி அறிவிப்பை ஈரோடு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்கள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டையைத் தாக்கல் செய்கிறேன். **அது எ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. நான் எனது வங்கிக் கணக்கு உள்ள சத்தியமங்கலம் மைசூர் டிரங்க் ரோட்டிலுள்ள ஐ.சி.ஐ.சி.ஐ வங்கியின் மேலாளருக்கு என்னுடைய 003582, 003583, 003584, 003585, 003586 ஆகிய காசோலைகளைப் பொறுத்து Stop payment செய்வதற்காக அனுப்பிய கடிதத்தின் கை நகல் மற்றும் அதை வங்கி மேலாளர் பெற்றுக்கொண்டதற்கான

அஞ்சலக ஒப்புகை அட்டையை தாக்கல் செய்கிறேன். **அது எ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. நான் புகார்தாரரிடமிருந்து எந்தக் கடனையும் பெறவில்லை. எனக்கு கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. என் பெயரிலுள்ள சொத்தக்களை அபகரிக்கும் எண்ணத்தில் புகார்தாரர் அவருடைய நண்பர்களான ரவிக்குமார், கோடீஸ்வரன் ஆகியோர்களுடன் சேர்ந்து இந்த வழக்கை என்மீது பொய்யாக தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.